# திருவருகைக் காலம் - முதல் ஞாயிறு

## முதலாம் ஆண்டு - நவம்பர் 30, 2025

**எசா 2:1-5 உரோ 13:11-14அ மத் 24:37-44**

**இதுவே நேரம்! உங்கள் வாள்களைக் கிழே போட்டுவிட்டு எழுந்து அவரது வருகைக்கு தயராகுங்கள்.**

**திருப்பலிக்கான முன்னுரை:**

ஒரு சில ஆண்டுகளுக்கு முன், இளைஞன் ஒருவன் சுவிட்சர்லாந்து ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் ஏறிக்கொண்டிருக்கும்போது திடீரென்று ஏற்பட்ட பனிப்புயலில் சிக்கி தன் வழியை தவறவிட்டுவிட்டார். இரவு நேரம் நெருங்கியது. அந்தப் பள்ளத்தாக்கில் தொலைதூரத்தில் சிறிய வெளிச்சம் தென்பட்டது. அவரைத் தேடி அந்த மலையேற்ற மீட்புக்குழுவைச் சேர்ந்த ஒருவர் ஏந்தி நின்ற சிறிய லாந்தர் விளக்கு மினுக்கி மினுக்கி ஒளிர்ந்து கொண்டிருந்தது. அந்த சிறிய விளக்கொளி அவரது வாழ்வைக் காத்தது. 'அந்த விளக்கொளியை பார்த்தபோதுதான் நான் இன்னும் மறக்கப்படவில்லை என்பதை உணர்ந்தேன். என்னைத் தேடி யாரோ ஒருவர் வந்துகொண்டிருக்கிறார் என்று உள்ளுற உணர்ந்து பின்பு அவர் சொன்னார்.

இன்று நாம் புனித திருவருகைக் காலத்தினைத் தொடங்குகிறோம்.

இதுவே கண்காணிக்கும் நேரம்.. காத்திருக்கும் நேரம். விழித்திருக்கும் நேரம். ஆன்மீகச் சோம்பலில் நம்மை அடிக்கடி அமிழ்த்தும் இந்த உலகில், ஆண்டவர் நம்மை எழுந்து அவரது ஒளியைத் தேர்ந்து, அவர்தம் அமைதியின் பாதையில் நடப்பதற்கு அழைக்கிறார். நம் வாள்களை கலப்பைகளாக்கவும் ஒளியின் படைக்கலன்களை நாம் அணிந்துகொள்ளவும் ஆண்டவரின் வருகைக்காக நம்மை ஆயத்தப்படுத்தவும் பெருநம்பிக்கையோடு பெட்டகத்தைக் கட்டமைத்தத நோவாவைப் போல இறைவன் நம்மை அழைக்கிறார். திறந்த மனதோடும் நம்பிக்கை மற்றும் அதையின் மக்களாக வாழ்வதற்கான புதுப்பிக்கப்பட்ட பற்றார்வத்தோடும் நாம் இந்தப் புனிதக் காலத்தில் நுழைந்திடுவோமாக.

**பாவமன்னிப்பு வழிபாடு**

விழிப்புணர்வோடு நாம் காத்திருக்கும் இப்புனிதக் காலத்தைத் தொடங்கும் நாம் பாவத்தில் விழுந்த தருணங்களைக் ஒப்புக்கொண்டு, ஆண்டவர் அவர்தம் இரக்கத்தால் நம்மைத் தூண்டியெழுப்ப இறைஞ்சுவோம்.

(சற்றே அமைதி காக்கவும்).

எம் சோம்பலிலிருந்து எழும்ப அழைக்கும் ஆண்டவராகிய இயேசுவே, ஆண்டவரே இரக்கமாயிரும்.

இருளகற்றும் ஒளியாக உள்ள இயேசு கிறிஸ்துவே,

கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.

வாழ்வோரையும் இறந்தோரையும் மாட்சியோடு வரும்போது நடுதீர்க்க வருகின்ற ஆண்டவராகிய இயேசுவே,

ஆண்டவரே, இரக்கமாயிரும்.

எல்லாம் வல்ல இறைவன்

(சில நிமிடங்கள் அமைதியாக தியானித்துவிட்டு)

பாவத் தூக்கத்திலிருந்து நம்மை எழுப்பி, அவரது அமைதியின் ஒளியில் நடக்க நம்மை அழைக்கும் எல்லாம் வல்ல இறைவன், நம்மீது இரக்கம் வைத்து, நம் பாவங்களை மன்னித்து முடிவில்லாத வாழ்வு அளிப்பாராக. ஆமென்.

**திருக்குழும மன்றாட்டு :**

எல்லாம் வல்ல இறைவா, உம் நம்பிக்கையாளருக்கு மன உறுதியை அளித்தருளும்; அதனால் வரவிருக்கும் உம் கிறிஸ்துவை அவர்கள் நீதிச் செயல்களுடன் எதிர்கொள்ளவும் அவரது வலப் பக்கத்தில் சேர்க்கப்பட்டு விண்ணக அரசைப் பெற்றுக்கொள்ளவும் தகுதி பெறுவார்களாக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து, ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**வாசகங்கள்**

**எசா 2:1-5 / உரோ 13:11-14அ / மத் 24:37-44**

**மறையுரை**

## எழு..அமைதியை ஏற்படுத்து!

### தொடக்க கதை- கலங்கரை விளக்க பராமரிப்பாளர்

சில ஆண்டுகளுக்கு முன்பு, இளம் மாலுமி ஒருவர் கடலில் கடும் புயலில் சிக்கிக் கொண்டார். கடல் கொந்தளித்து கடுமையான அலைகள் எழும்பின, எங்கும் இருள் சூழ்ந்திருந்துது. மேற்கொண்டு அவரால் கப்பலைச் செலுத்து முடியவில்லை. அவர் நம்பிக்கை இழந்து தவித்தபோது, தோன்றித் தோன்றி மறையும் ஒளிப்பிழம்பைப் பார்த்தார். ஆம் கடற்கரையில் ஒரு கலங்கரை விளக்கம் ஒன்று அவரை பாதுகாப்பாக கரையை நோக்கி வழிநடத்தியது. பின்பு அவர் சொன்னார்.. அங்கு மட்டும் அந்த ஒளி பிழம்பு

தோன்றியிருக்காவிட்டால் என்னால் கரையை அடைந்திருக்க முடியாது. என்னை யாரோ ஒருவர் கண்காணித்துக் கொண்டிருக்கிறார் என்பதை இது எனக்கு நினைவுப்படுத்தியது.

அந்த கலங்கரை விளக்கத்தைத்தான் இந்த திருவருகைக்காலம் நமக்கு நினைவுப்படுத்துகிறது. கடவுளின் பேரொளி இருளைக் கிழித்து ஊடுருவி, நம்மை விழிப்புணர்வுக்கும் எழுச்சிக்கும் நம்பிக்கைக்கும் அழைக்கிறது.

**ஞாபகம் இருக்கிறதா?**

1980 களில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை உங்களில் சிலர் நீங்கள் இன்றும் ஞாபகத்தில் கொண்டிருப்பீர்கள். உங்கள் ஆயுதங்களை கலப்பைகளாக்குங்கள்.. என்று பதாகைகளுடன் மக்கள் சாரை சாரையாக நகரங்களில் அணிவகுத்தனர். ஆயுதங்களை களைந்திடுங்கள்...அமைதிக்கான ஏக்கமாக ஒலித்த இறைவாக்கினர் எசாயாவின் அழுகுரலைஅப்படியே எதிரொலித்து நடைபெற்ற ஓர் அமைதிப் பேரியக்கத்தின் முழக்கமாக இது இருந்தது.

அந்தக் கனவுக்கு என்ன ஆயிற்று? ஏவுகணைகள் அனைத்தும் அக்கு அக்காக பிரிக்கப்படவேண்டும். ஆம். அமைதி இந்தப் பூமியை ஆள்கிறதா? உண்மையில் இல்லை. புதிது புதிதாக போர்கள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. பயங்கரவாதம், வெறுப்பு, பிரிவினை இம்மண்ணில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. அப்படியெனில் இறைவாக்கினர் எசாயாயினுடைய தொலைநோக்குப் பார்வை தோற்றுவிட்டதா?

**வெற்று முழக்கமா? வாக்குறுதியா?**

எசாயாவின் வார்த்தைகள் வெறும் வெற்று முழக்கமாக இருக்க முடியாது. அவை இறைவாக்கினருக்குரிய வாக்குறுதிகள். இறைவன்தாமே நாடுகளுக்கிடையே பரஸ்பரம் ஏற்படவும், சிக்கல்கள் தீர்க்கப்படவும் நடுவராக அதில் தலையிடுவார். மனித கரங்கள் ஏற்படுத்தப்பட்ட அமைதியை அன்று, மாறாக இறைவனால் அருளப்பட்ட அமைதியை ஏற்படுத்துவார்.

அந்த அமைதி என்பது ஏதோ உச்சி மாநாடுகளிலோ உடன்படிக்கைகளிலோ ஒருபோதும் தொடங்காது. மாறாக, இறைவனால் மாற்றத்திற்குள்ளான இதயங்களில்தான் தொடங்கும். அது நம் இல்லங்களில், நம் சமூகங்களில், நம் ஆன்மாக்களில் தொடங்கும்.

**போரின் வேரும் அமைதியின் விதையும்**

அரசுகளின் சட்டமன்றங்களிலும் போர்க்களங்களிலும் போர்கள் தொடங்குவதாக நம் கற்பனைசெய்கிறோம். ஆனால் இறைவாக்கினர் எசாயா, இன்னும் சற்றும் ஆழமாக பார்க்கிறார். ஆம். அவை மனித இதயங்களில் - ஆணவம், பொறாமை, தற்புகழ்ச்சி, இறைவனின் வழிகளை ஏற்க மறுப்பதாலும் தோன்றுகின்றன என்று குறிப்பிடுகிறார்.

இறைவாக்கினர் எசாயா, அவர்தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார்: நாமும் அவர்தம் நெறிகளில் நடப்போம் என்பார்கள்.

**சிறுகதை: ஒரு பையனும் இரண்டு ஓநாய்களும்.**

அமெரிக்க பூர்வக்குடியைச் சேர்ந்த ஒரு தாத்தா தன் பேரனிடம், " என் உள்ளத்தின் ஆழத்தில் இரண்டு ஓநாய்களுக்கிடையே கடுமையான சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கோபம், பொறாமை, பேராசை, ஆணவம் ஆகிய ஓர் ஓநாய். அமைதி, மகிழ்ச்சி, கருணை மற்றும் உண்மை என்னும் மற்றோர் ஓநாய்.

இவற்றில் எந்த ஓநாய் வெல்லும்? என்று அந்த பையன் கேட்டான். உடனே தாத்தா, நீ எதற்கு தீனி போடுகிறாயோ, அதுதான் வெல்லும்.

இதனைத்தான் இறைவாக்கினர் எசாயா இறைவாக்கினர் எடுத்துச் சொல்கிறார். ஆணவத்திற்கு தீனி போட போட போர் வளரும். தாழ்ச்சி, உண்மை, மற்றும் சரணாகதிக்கு உணவிடுங்கள். அமைதி மலரும்.

**விழித்தெழும் நேரம் (உரோ 13)**

திருத்தூதர் பவுல் ஆன்மீக உறக்கத்தைப் பற்றி எச்சரிக்கிறார். உறக்கத்தினின்று விழித்தெழும் நேரம் ஏற்கனவே வந்துவிட்டது. விசுவாசம் என்பது அரைமனதோடும், தனக்கேற்றபடி வளைத்தும், செயற்பாட்டுவினையாகவும் மேற்கொள்ளவேண்டிய ஒன்றல்ல.

**சிறுகதை: போர்வைக்குள்ளே**

ஒரு குருவானவர் எப்படி அவரும் அவர்தம் தம்பியும் ஒரே படுக்கையில் உறங்கினர் என்பதை நினைவுகூர்ந்தார். ஒருநாள் அதிகாலை அவர்கள் இருவரும் போர்த்தியபடியே படுக்கையை விட்டு எழாமல் முழித்திருந்தனர். அவர்தம் தம்பி. அவரிடம் நம் அம்மா நம்மை ஒருவேளை எழப்பவில்லை என்றால் நாம் பள்ளிக்கும் தாமதாமாக சென்றிருப்போம்" என்று சொன்னார்.

அவர்கள் முழித்திருந்தனர், ஆனால் அங்கிருந்து நகரவில்லை. நம்மில் எத்தனைபேர் விசுவாசத்தை வாழ்கின்றனர். அது செயற்பாட்டு வினையாகவே உள்ளது என்பதை அறிந்திருக்கிறோமா? இந்தத் திருவருகைக் காலம் நம்மைத் தட்டியெழுப்புகிறத. விழித்தெழு..தொடர்ந்து நகருங்கள்..ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்ளுங்கள்.

**நாடோடி இசைக்கலைஞன்**

தெருவில் இசை இசைத்துக்கொண்டிருந்த இசைக் கலைஞரை கடந்து, இது வெறும் சத்தம் மட்டுமே என்று எண்ணிக்கொண்டு ஒருவர் கடந்து சென்றார். ஆனால் அவர் நின்றபோது,

அந்த இசை அவர் மிகவும் ஏங்கித் தவிக்கிற நம்பிக்கையை, மகிழ்ச்சியை, ஆறுதலை சுமந்து கொண்டிருக்கிறது என்பதை அவர் உணர்ந்தார். இறைவன் நம் ஒவ்வொருவரையும் அந்த இசையைப் போலவே மிகவும் தன்மையாக அதே சமயம் மிகுந்த ஆற்றலோட அழைக்கிறார்.. அதனை நாம் கேட்கிறோமா?

**நம் அன்றாட வாழ்வின் ஆயுதங்களை கீழே போடுங்கள்**

ஒரு பெண்மணி தம் தோட்டத்தின் வேலியை சேதப்படுத்திய தம் அண்டைவீட்டார்மீது மிகுந்த கோபம் கொண்டிருந்தார். திருவருகைக் காலத்தின் ஓர் அதிகாலை, தம் செபத்தில் ஈடுபட்டிருந்தபோது உள்ளுற மன்னித்து உன் வாளை கீழே போடு என்பதை உணர்ந்தார். ஆனால் அவருக்குள் ஒரே தயக்கம். இருப்பினும் தம் அண்டை வீட்டுப் பெண்மணியை தேநீர் விருந்துக்கு அழைத்தார். இருவரும் சிரித்து பேசி மகிழ்ந்து, இணைந்தே அந்த வேலியைச் சரி செய்தனர். அந்த சிறு செயல் அவர்தம் இல்லத்திற்கும் இதயத்திற்கும் அமைதியை கொணர்ந்தது. உண்மையிலேயே அவர் திருவருகைக் காலத்தை வாழ்ந்து காட்டினார்.

**கதவருகே ஓர் ஒளி விளக்கு**

உரோமையின் பழங்கல்லறை ஒன்றில், அவர் ஒளிர்ந்து கொண்டிருக்கின்ற விளக்குடன் விழித்திருந்தவாறே கண்டுபிடிக்கப்பட்டார். தொடக்கக் கால கிறிஸ்தவர்கள், கிறிஸ்து நம்மை வெறும் நம்பிக்கையாளர்களாக மட்டும் பார்க்கக்கூடாது, கூடவே, மிகுந்த விழிப்புணர்வோடும் செயல்பாடு நிறைந்த அன்போடும் பற்றியெரிபவர்களாக காணவேண்டும் என்று நம்பினார்கள்.

**கடைசிப் பணப்பை**

ஒருவர் தெருவில் நடந்து செல்லும்போது, அடையாள அட்டைகளோடும் நிறைய பணத்தோடும் பணப்பை ஒன்றைக் கண்டெடுத்தார். அவர் நினைத்திருந்தால் சிலரைப் போல அதனை அவரே வைத்திருக்கலாம். அதனை அதன் உரிமையாளரிடமே திரும்ப ஒப்படைத்தார். அந்த நேர்மையான துணிச்சலான சிறிய செயல் இருளுக்கு நடுவே ஒளிரும் சிறு விளக்கைப் போல நம்பிக்கை தந்தது.. இறை நெறிகளில் நாம் நடைபோட நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

**பேழைக்குள் நுழைவோம்.**

இதன் பிறகு நோவா வருகிறார். வறண்ட நிலத்தில் பேழையை கட்டும்போது அங்கே ஒவ்வொருவரும் பரிகசித்து நகைப்பதை நாம் கற்பனை செய்வோம். சில நம்பிக்கையாளர்கள் இதனை நீங்கள் அப்படியே பேசுகிறீர்கள் என்று சொன்னார்கள்.

**கிராமத்து நெருப்பு**

ஒரு கிராமத்தை நோக்கி பற்றி எரியும் நெருப்பு படர்ந்து நெருங்கி வருவதை ஒரு வனக்காவலர் பார்த்தார். ஒரு வீடு நெருப்பால் சூழப்பட்டது,ஆனால் அது அடுத்த வீட்டை நெருங்கவில்லை. இந்த அபாயத்தை உணராமல் அவர்கள் தொடர்ந்து வீட்டிற்குள் உணவருந்தி கொண்டிருந்தனர். அந்த வனக்காவலரோ, சத்தமாக, வீட்டை விட்டு வெளியே வாருங்கள்.. நெருப்பு வந்து கொண்டிருக்கிறது. ஆனால் அவர்களோ, இது வரை எங்களுக்கு அபாயம் இல்லை பதில் சொல்லினர்.

பத்து நிமிடம் கழித்து அவர்களது வீடு தீக்கிரையானது.

திருவருகைக் காலம் என்பது நம் வீட்டுக் கதவுக்கு முன்பு நின்று கொண்டு "விழித்தெழுங்கள்.. அனைத்தையும் அப்படியே விட்டுவிட்டு பேழைக்குள் நுழைந்திடுங்கள்" நம்மை எச்சரிக்கிற வனக்காவலரைப் போன்றது. கிறிஸ்துதாமே அந்தப் பேழை. வாழ்வின் போராட்டப் புயலில் நமக்கான தஞ்சம் அவரே..

**சிறுகதை: முதல் திருவிருந்தில் கேட்கப்பட்ட கேள்வி**

முதன் முதலாக நற்கருணையைப் பெறப்போகும் சிறுமி என்னுடைய திருமுழுக்கின்போது எனக்காக என் பெற்றோர் பேசியது ஏன்? நான் ஏன் எனக்காகப் பதில் சொல்லக்கூடாது? நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட நல்ல முடிவுகளை மேற்கொள்ள அழைக்கிறது. நான் கிறிஸ்துவுக்கு ஆம் என்று சொன்னேனா? நான் பேழைக்குள் இருக்கிறேனா?

**நம் அன்றாட வாழ்வின் ஆயுதங்களைக் கீழே போடுவோம்**

தன் சகத் தோழர்களுடன் ஒருவன் பல ஆண்டுகளாக கடுமையான கோபம் கொண்டிருந்தான். திருவருகைக் காலத்தின் ஒரு மாலைவேளையில், செபத்தின் போது, "மன்னித்துவிடு, சமாதானத்திற்கான இடத்தை ஏற்பாடு செய்திடு" என்று வார்த்தைகளால் தூண்டியெழுப்பட்டான். அடுத்தநாள் காலை. அவன் மன்னிப்பு கேட்டான். அவர்கள்தம் கூட்டுமுயற்சி வளர்ந்தது. அந்த கோபதாபங்கள் மறைந்தன. இருவரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். சிலசமயங்களில் பேழைக்குள் நுழைவது என்பது நமது பழைய மோதல்களை முரண்பாடுகளைச் சரணடையச் செய்திட வேண்டும்.

**சிறுகதை: குடும்ப மேஜை**

ஒரு குடும்பம் தங்களுக்கு வர வேண்டிய சொத்துகள் குறித்தும் பழைய ஏற்றுக்கொள்ள இயலாத ஒப்பந்தங்கள் குறித்தும் தொடர்ந்து விவாதித்து வந்தது. திருவருகைக் கால ஞாயிறன்று, சகோதரர் ஒருவர், பழைய கோபதாபங்களையெல்லாம் ஓர் ஓரமாக ஒதுங்கிவைத்துவிட்டு, ஒவ்வொருவரையும் விருந்துக்கு அழைத்தார். அந்தச் சிறிய செயலானது பிரிந்திருந்த குடும்பத்தை ஒன்று சேர்த்தது. அந்த சாப்பாட்டு மேஜை அமைதி மற்றும் மகிழ்ச்சியின் மேஜையாக மாறியது. வாள்கள் கலப்பைக் கொழுக்கள் ஆகிட என்ற இறைவாக்கினர் எசாயாவின் தொலைநோக்குப் பார்வை வாழ்ந்து காட்டப்பட்டது.

**சிறுகதை: விளையாட்டுத்திடல் சண்டை**

ஊஞ்சலில் யார் முதலில் ஆடுவது என்று இரண்டு குழந்தைகள் தங்களுக்குள் சண்டைப்போட்டுக்கொண்டனர். இதனைக் கவனித்த பள்ளி ஆசிரியை அவர்களை கடுமையாக தண்டிப்பதற்குப் பதிலாக, வேறொன்று செய்யும்படி அவர்களுக்கு வழிகாட்டினார். ஒருவர் மற்றொருவரை மன்னித்துவிட்டு, அதற்கு அருகில் ஒரு கோட்டைக் கட்டும்படி கேட்டுக்கொண்டார். குழந்தைகள் தங்களின் கோபத்தை எப்படி போக்குவது என்பதைக் கற்றுக்கொண்டனர்.. ஒருவர் மற்றொருவருக்கு நல்ல ஒத்துழைப்பு தந்து, மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டனர். இந்தச் சின்ன செயல்தான் இந்த உலகில் கருணைமிக்க ஒரு பேழையை உலகில் கட்டமைக்கிறது.

**காற்றில் அசைந்தாடும் மெழுகுவர்த்தி**

ஆசியாவில், ஒரு வனக்காவலர் ஒரு கிராமத்தை காட்டுத்தீ நெருங்கி வருவதைப் பார்த்தார். ஒரு வீடு மட்டும் பாதிக்கப்படவில்லை. ஆனால் அந்த வீட்டிற்குள் இருந்தவர்கள் அந்த அபாயத்தை உணரவேயில்லை. அவர்களுடைய கண்டுகொள்ளாத மனநிலை அவர்களுக்கு ஆபத்தைக் கொணர்ந்தது.

**கடைசி கதை: வீட்டுக்கூரையின் மேல் விளக்கு**

ஒரு மாலைவேளையில் மீனவர் ஒருவர், கடற்கரையிலிருந்து வெகு தொலைவிற்கு தம் படகை துடுப்பசைத்து எடுத்துச் சென்றுவிட்டார். வீட்டுக் கூரையின் மேல் ஒரு விளக்கு மங்கலாக ஒளிர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். அதனை நோக்கி தம் படகை இயக்கியபோதுதான் அது வெறும் ஒளி அன்று.. மாறாக யாரோ சிலர் அவர் திரும்பி வர வேண்டும் என்று அவரை வீட்டிற்கு அழைப்பதற்காக காத்திருந்தனர்.

இது திருவருகைக் காலம். இறைவன் நம்மை அழைக்கிறார். அவர்தம் ஒளியை நாம் ஏந்த வேண்டும் என்பதற்காக, நம் இதயங்களை ஒளியேற்றுகிறார். அவர்தம் இரக்கத்தின் பேழைக்குள் நுழைவதற்கு நம்மைத் தூண்டுகிறார்.

இந்த அழைப்பை இல்லத்திற்கு எடுத்துச் செல்வோம்.

இந்த திருவருகைக்காலம் – வெறும் மெழுகுவர்த்திகளை மட்டுமே ஏற்றுவதற்கு அல்ல, மாறாக நெருப்பைப் பற்றவைப்பது

- ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற செல்லுங்கள்.
- மீண்டும் செபிக்கத் தொடங்குங்கள்.
- மற்றவரை மன்னித்திடுங்கள்
- நல்ல ஓநாய்க்கு இரை போடுங்கள்.
- எழுந்திடுங்கள்.

- ஒளியில் நடந்திடுங்கள்.
- பேழைக்குள் நுழைந்திடுங்கள்.

புனித பவுலடியார் கூறுவதைப் போல "உறக்கத்தினின்று விழித்தெழும் நேரம் ஏற்கனவே வந்துவிட்டது. .. இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள்". ஆமென்.

**நம்பிக்கை அறிக்கைக்கான அழைப்பு**

இறைவாக்கினர்களுடைய அழைப்பையும் நம்மிடையே இறைவன் வருகின்றார் என்ற நல்ல செய்தியைக் கேட்ட நாம் அனைவரும் நம்மை நம்பிக்கையில் வலிமைப்படுத்தி, அமைதியில் வலிமையடையச் செய்து, ஆண்டவருடைய ஒளியில் நடக்கச் செய்யும் நம் விசுவாசத்தை இணைந்து அறிக்கையிடுவோம்.

**காணிக்கைமீது மன்றாட்டு**

ஆண்டவரே, நீர் எங்களுக்கு அளித்துள்ள கொடைகளிலிருந்து நாங்கள் ஒப்புக்கொடுக்கும் இக்காணிக்கைகளை ஏற்றருள உம்மை வேண்டுகின்றோம்: நாங்கள் இங்கு இறைப்பற்றுடன் கொண்டாட நீர் எங்களுக்குக் கொடுத்துள்ளவை உமது நிலையான மீட்பின் பரிசாக அமைவனவாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே - அறிமுக அழைப்பு**

ஆண்டவரின் வருகைக்காகக் காத்திருக்கும் நாம், அவருக்காக ஏங்கும் இதயத்துடன் ஆண்டவர் இயேசு தாமே கற்றுக்கொடுத்த செபத்தைச் செபிப்போமாக.

விடுவித்தருளும் ஆண்டவரே .. பொய்யின்பத்தின் உறக்கத்திலிருந்து, எம்மை விடுவித்தருளும் ஆண்டவரே என்று நாங்கள் மன்றாடுகிறோம். உமது ஒளிச் சுடரிலிருந்து எம் இதயங்களைத் தூண்டி எழுப்பியருளும். உமது ஆவியின் ஆற்றலால் உமது அழைப்பிற்கு நாங்கள் தட்டி எழுப்பப்படுவோமாக. எம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக உமது விழிப்புணர்வுமிக்க இதயத்துடன் எம்மைத் தயாரிக்கும் நாங்கள், எங்கள் இல்லங்களிலும் உலகத்திலும் அமைதியை வளர்த்து, தயாரித்திஇரக்கத்தின் பேழைக்குள் நாங்கள் தஞ்சமடைந்திடுவோமாக.

**அமைதிக்கான மன்றாட்டு**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், என் அமைதியையே உங்களுக்கு அளிக்கின்றேன் என்று உம் திருத்தூதர்களுக்கு மொழிந்தீரே. எங்கள் பாவங்களைப் பாராமல், உமது திருஅவையின் நம்பிக்கையைக் கண்ணோக்கி, உமது திருவுளத்திற்கேற்ப அதற்கு அமைதியையும் ஒற்றுமையையும் கிழித்தெறிக்கப்பட்டதைப் சீர்படுத்தும் அமைதியை, பலனளிக்காததை மீண்டும் பலனளிக்கச் செய்யும் அமைதியை, எம்முடைய உலகை உமது அரசாட்சியின் மாற்றுகிய அமைதியை அளித்தருள்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் நீரே.

**திருவிருந்துக்கான அழைப்பு**

இதோ இறைவனின் செம்மறி. உறக்கத்திலிருப்பவரைத் தட்டி எழுப்புகிற ஒளி இதோ, வாள்களை கலப்பைக் கொழுக்களாக்குகிற அமைதியின் இளவரசர் இவரே, இரக்கத்தின் பேழைக்குள் நம்மை அழைக்கிற ஆயர் இவரே. இதோ உலகின் பாவங்களைப் போக்குபவர். செம்மறியின் திருவிருந்துக்கு அழைக்கப் பெற்றோர் பேறுபெற்றோர்.

**திருவிருந்துக்குப் பின் செபம்**

ஆண்டவராகிய இயேசுவே, கடும் புயலுக்கு நடுவே நீரே நாங்கள் அடைக்கலம் அடைந்திடும் பேழையாகவும் இருளில் நடுவே ஒளியாகவும் தூக்கத்திலிருந்து எம்மை எழுப்பும் விடியற்காலையின் நட்சத்திரமாகவும் இருக்கிறீர். எனது ஆன்மீகத்தை நித்திரைக்குள்ளாக்கும் நான் சுமக்கும் எனது அன்றாட வாழ்வின் சோர்வையும் பயத்தையும் உம்மிடம் தருகின்றேன். இந்த நற்கருணை திருவிருந்தின் வழியாக நீர் என் வாழ்வில் மீண்டும் நுழைந்துள்ளீர். அமைதி என்பதை ஒரு கருத்தியலாக கருதாமல், உமது வாழும் திருப்பிரசன்னத்திற்காக

நான் எழுந்து நிற்கவும் உமது ஒளியில் நடக்கவும் என் இதயத்தை விசாலமாக்கவும் எனக்கு உதவும். ஆண்டவராகிய இயேசுவே வாரும். ஆமென்.

**திருவிருந்துப் பல்லவி :**

திபா 84:13 ஆண்டவர் இரக்கம் அருள்வார்; நமது நிலமும் தனது பலனைத் தரும்.

**திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு :**

ஆண்டவரே, நிலையற்றவற்றின் நடுவில் நாங்கள் வாழ்கின்றோம்; எனவே நாங்கள் பங்கேற்கும் மறைநிகழ்வுகள் விண்ணகத்துக்கு உரியவற்றை அன்பு செய்யவும் நிலைத்து நிற்பவை மீது பற்றுக் கொள்ளவும் எங்களுக்குப் பயன் அளிப்பனவாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**இறுதி ஆசீர்.**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உம்மை ஆசிர்வதித்து, நம்பிக்கையில் நீங்கள் என்றும் நிலைத்திருக்க ஆசிர்வதிப்பாராக. ஆமென்.

ஆண்டவர் நீங்கள் உங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் உங்கள் சுமைகளை சுகமாக மாற்றுவராக. ஆமென்.

ஆண்டவர்தம் ஒளியில் நீங்கள் நடந்து, அவர் வரும்போதுஅவர்தம் பேழைக்குள் நுழைவதற்கு ஆயத்தமாகிடுவீர்களாக. ஆமென்.

எல்லாவல்ல இறைவன் தந்தை மகன் தூய ஆவியார் உங்கள் ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசிர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் எழுந்து அவர்தம் ஒளியில் நடப்பதற்கு சென்று வாருங்கள் திருப்பலி நிறைவேறிற்று.

**இல்லத்திற்கு எடுத்துச் செல்ல சிந்தனையொன்று:**

இந்தத் திருவருகைக் காலம் என்பது மெழுகுவர்த்திகளை ஏற்றுவதற்கான காலமன்று, மாறாக தீயை மூட்டுவதற்கான காலம். ஆகையால் எழுந்திடுவோம். நம் ஆயுதங்களைக் கீழே போடுவோம். பேழைக்குள் நுழைந்திடுவோம். இதோ.. ஆண்டவர் வருகின்றார். மாரநாதா!.

**தயாரிப்பு:**

**அருள்முனைவர் பால் ஜூலியன், ஆஸ்திரேலியா**

மேலும் விவரங்களுக்கு காண்க...

www.virginofrevelationaustralia.com